


# கலிமாவின் விளக்கம்

இஸ்லாமிய கொள்கையின் அடிநாதமாக விளங்குவதுதான் "லாஇலாக இல்லாஹ்" என்ற கலிமாவாகும் இக்கலிமாவை நிலைநாட்டுவதற்காகத்தான் உலகில் பலதூதர்கள் அல்லாஹ்வால் அனுப்பப் பட்டார்களா: எல்லாத் தூதர்களும் இந்தக் கலிமாவின் பக்கமே மக்களை அழைத்தார்கள். அதற்காகவே பல இன்னல்களை அனுபவித்தார்கள் ஊரில்இருந்து அகதிகளாக விரட்டப்பட்டார்கள். சிலநபிமார் கொலை கூட செய்யப்பட்டார்கள். எல்லா நபிமாரும் செய்த அழைப்புப் பணிதான் அலலாஹ்வை வணங்குங்கள் அவனுக்கு எதைக்கொண்டும் இணைவைககாதீர்கள் தாஊத்களை தவிர்ந்து கொள்ளுங்கள் (35:32)

அல்லாஹ் அல்லாமல் வணங்கப்படக்கூடிய எல்லாமே தாஊத்கள் என அழைக்கப்படுகின்றது. அல்லாஹ் அல்லாத சிலைகள்.கப்றுகள்.நல்லடியார்கள் போன்ற அனைத்தையும் விட்டுவிட்டு அல்லாஹ்வைமாத்திரமே வணங்குங்கள் என்ற கொள்கையை அனைத்து நபிமார்களும் ஓங்கி ஒலித்தார்கள் இதன்தொடரில் வந்த நபி (ஸல்)அவர்களும் தமது சமூகத்திற்கு இந்தக் கொள்கையை தெளிவாகவே எடுத்துச் சொன்னார்கள் இதனால்தான் குறைஷிகள் கேட்டார்கள் ."ஒரு பைத்தியக்காரப் புலவருக்காக நாங்கள் மெய்யாக எங்கள் தெய்வங்களைக் கைவிட்டு விடுகிறவர்களா?" என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

37:37 .அப்படியல்ல! அவர் சத்தியத்தையே கொண்டு வந்திருக்கிறார் அன்றியும் (தமக்கு முன்னர் வந்த) தூதர்களையும் உண்மைப்படுத்துகிறார். 37:36-37

ஆனால் இன்று சிலர் எந்த கொள்கையை உடைத்தெறிவதற்காக நபிமார்கள் அனுப்பப் பட்டார்களோ அதே கொள்கையைததான் கலீமா விளக்குவதாகக் கூறி கலீமாவுக்கு புது வியாக்கியானம் செய்வதற்கு முற்படுகிறார்கள் லாஇலாக இல்லாஹ் என்ற கலிமாவில் வரும் இலாஹு க்கு தவறான விளக்கம் கற்பித்து தெளிவில்லாமல் இந்துமத சித்தாந்தங்களை இஸ்லாம் என சித்தரிப்பதற்கு இஸ்லாம் பற்றித் தெரியாத சிலரும் தெரிந்தும் தெளிவில்லாத பலரும் முயற்சி செய்துள்ளனர். இதனால் இலாஹ் என்ற சொல் அல் குர்ஆன் அஸ்ஸு ன்னாவில் எப்படிப் பயன் படுத்தப் பட்டுள்ளது என்பதை தெளிவாக விளங்குவோம் இலாஹ் என்ற வார்த்தை குர்ஆனில் 67 வசனங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது. அதேபோல் ஆலிஹத்.இலாஹைன் போன்ற சொற்களும் அல்குர்ஆனின் பலவசனங்களில் பயன் படுத்தப்பட்டுள்ளது. இலாஹ் என்ற சொல் குர்ஆன்.ஹதீஸில் பயன் படுத்தப்பட்டுள்ள விதம்

1-அல்லாஹ்வை குறிப்பதற்காக பயன் படுத்தப் பட்டுள்ளது

2-அல்லாஹ் அல்லாமல் மனிதர்கள் தாங்கள் கடவுளாக எடுத்துக்கொண்ட சிலைகள்.நல்லடியார்கள்.கப்றுகள் போன்ற அனைத்தையும் குறிப்பதற்காக அல்லாஹ்வால் பயன் படுத்தப் பட்டுள்ளது

3-மனோஇச்சைக்கு கட்டுப்பட்டு மனோஇச்சைக்கு வழிப்படுவதையும் குறிப்பதற்கு இலாஹ் என்றவார்த்தை அல்குர்ஆனில் இறைவனால் பயன்படுத்தப் பட்டுள்ளது

1-அல்லாஹ்வை குறிப்பதற்காக பயன் படுத்தப் பட்டுள்ள வசனங்களுக்கு உதாரணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்

وَإِلَهُكُمْ إِلَهٌ وَاحِدٌ لَا إِلَهَ إِلَّا هُوَ الرَّحْمَنُ الرَّحِيمُ [البقرة : 163

. மேலும், உங்கள் நாயன் ஒரே நாயன் தான், அவனைத் தவிர வேறு நாயனில்லை. அவன் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன (2:163)

اتَّخَذُوا أَحْبَارَهُمْ وَرُهْبَانَهُمْ أَرْبَابًا مِنْ دُونِ اللَّهِ وَالْمَسِيحَ ابْنَ مَرْيَمَ وَمَا أُمِرُوا إِلَّا لِيَعْبُدُوا إِلَهًا وَاحِدًا لَا إِلَهَ إِلَّا هُوَ سُبْحَانَهُ عَمَّا يُشْرِكُونَ [التوبة : 31

அவர்கள் அல்லாஹ்வை விட்டும் தம் பாதிரிகளையும், தம் சந்நியாசிகளையும் மர்யமுடைய மகனாகிய மஸீஹையும் தெய்வங்களாக்கிக் கொள்கின்றனர் ஆனால் அவர்களே ஒரே இறைவனைத் தவிர (வேறெவரையும்) வணங்கக்கூடாதென்றே கட்டளையிடப்பட்டுள்ளார்கள் வணக்கத்திற்குரியவன் அவனன்றி வேறு இறைவன் இல்லை - அவன் அவர்கள் இணைவைப்பவற்றை விட்டும் மிகவும் பரிசுத்தமானவன் (9:31)

هَذَا بَلَاغٌ لِلنَّاسِ وَلِيُنْذَرُوا بِهِ وَلِيَعْلَمُوا أَنَّمَا هُوَ إِلَهٌ وَاحِدٌ وَلِيَذَّكَّرَ أُولُو الْأَلْبَابِ [إبراهيم : 52.

இதன் மூலம் அவர்கள் எச்சரிக்கப் படுவதற்காகவும் (வணக்கத்திற்குரிய) அவன் ஒரே நாயன் தான் என்று அவர்கள் அறிந்து கொள்வதற்காகவும் அறிவுடையோர் நல்லுணர்வு பெறுவதற்காகவும் மனிதர்களுக்கு இது ஓர் அறிவிப்பாகும். (14:52)

உங்களுடைய நாயன் ஒரே நாயன்தான் எனவே, எவர்கள் மறுமையை நம்பவில்லையோ, அவர்களுடைய நெஞ்சங்கள் (இவ்வுண்மையை) நிராகரிப்பவையாக இருக்கின்றன - மேலும் அவர்கள் (ஆணவங் கொண்டு) பெருமையடிப்பவர்களாக இருக்கிறார்கள் (16:22)

. இன்னும், அல்லாஹ் கூறுகின்றான் இரண்டு தெய்வங்களை ஏற்படுத்திக்கொள்ளாதீர்கள் நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) அவன் ஒரே நாயன்தான்! என்னையே நீங்கள் அஞ்சுங்கள். (16:51)

. (நபியே!) நீர் சொல்வீராக “நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே! நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒரே நாயன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டிருக்கிறது் எவன் தன்னுடைய இறைவனைச் சந்திக்கலாமென ஆதரவு வைக்கின்றானோ அவன் (ஸாலிஹான) நல்ல செயல்களைச் செய்து, தன் இறைவனை வணங்குவதில் வேறெவரையும் இணையாக்காதும் இருப்பானாக.” (18:110)

அதேபோல் (5:73), (6:19), (21:108), (22:34), (41:6), (43:84), (114:3)

2-இலாஹ் என்ற வார்த்தை மனிதர்கள் கடவுளாக எடுத்துக் கொண்டவைகளுக்கு பயன்படுத்தப்பட்ட வசனங்கள்

قُلْ أَيُّ شَيْءٍ أَكْبَرُ شَهَادَةً قُلِ اللَّهُ شَهِيدٌ بَيْنِي وَبَيْنَكُمْ وَأُوحِيَ إِلَيَّ هَذَا الْقُرْآنُ لِأُنْذِرَكُمْ بِهِ وَمَنْ بَلَغَ أَئِنَّكُمْ لَتَشْهَدُونَ أَنَّ مَعَ اللَّهِ آلِهَةً أُخْرَى قُلْ لَا أَشْهَدُ قُلْ إِنَّمَا هُوَ إِلَهٌ وَاحِدٌ وَإِنَّنِي بَرِيءٌ مِمَّا تُشْرِكُونَ [الأنعام : 19

6:19 . (நபியே!) “சாட்சியத்தில் மிகவும் பெரியது எது?” எனக் கேளும் “அல்லாஹ்வே எனக்கும் உங்களுக்குமிடையே சாட்சியாக இருக்கின்றான் இந்த குர்ஆன் எனக்கு வஹீயாக அருளப்பட்டுள்ளது. இதைக் கொண்டு உங்களையும், (இதை அடைந்தவர்களையும் நான் அச்சமூட்டி எச்சரிப்பதற்காக நிச்சயமாக வணக்கத்திற்குரிய வேறு தெய்வங்களும் அல்லாஹ்வுடன் இருப்பதாக நீங்கள் சாட்சி கூறமுடியுமா? (என்று அவரிடம் கேட்பீராக) “இல்லை! நான் (அவ்வாறு) சாட்சி சொல்ல முடியாது என்றும் கூறுவீராக வணக்கத்திற்குரியவன் நிச்சயமாக அவன் ஒருவன் தான் அவனுக்கு நீங்கள் இணைவைப்பதிலிருந்து நான் நிச்சயமாக விலகிக் கொண்டவனே” என்று கூறிவிடும்.

[إِذْ قَالَ إِبْرَاهِيمُ لِأَبِيهِ آزَرَ أَتَتَّخِذُ **أَصْنَامًا آلِهَةً** إِنِّي أَرَاكَ وَقَوْمَكَ فِي ضَلَالٍ مُبِينٍ [الأنعام : 74

6:74 . இப்றாஹீம் தம் தகப்பனார் ஆஜரிடம், "விக்கிரகங்களையா நீர் தெய்வங்களாக எடுத்துக் கொள்கிறீர்? நான் உம்மையும் உம் சமூகத்தாரையும், பகிரங்கமான வழி கேட்டில் இருப்பதை நிச்சயமாக பார்க்கிறேன்" என்று கூறியதை நினைத்துப்பாரும்

جَاوَزْنَا بِبَنِي إِسْرَائِيلَ الْبَحْرَ فَأَتَوْا عَلَى قَوْمٍ يَعْكُفُونَ عَلَى أَصْنَامٍ لَهُمْ قَالُوا يَا مُوسَى اجْعَلْ لَنَا إِلَهًا كَمَا لَهُمْ **آلِهَةٌ** قَالَ إِنَّكُمْ قَوْمٌ تَجْهَلُونَ [الأعراف : 138]

7:138 . நாம் இஸ்ராயீலின் சந்ததியினரைக் கடலைக்கடந்து (அழைத்துச்) சென்றபோது, தங்களுக்குரிய விக்கிரகங்களை ஆராதனை செய்து கொண்டிருந்த ஒரு கூட்டத்தார் அருகே (அவர்கள்) சென்றார்கள். உடனே அவர்கள், "மூஸாவே! அவர்களிடமிருக்கும் கடவுள்களைப் போல் நமக்கும் நீங்கள் ஒரு கடவுளை ஆக்கித்தருவீர்களாக!" என்று வேண்டினர் "நிச்சயமாக நீங்கள் ஓர் அறிவில்லாத கூட்டத்தாராக இருக்கின்றீர்கள்" என்று மூஸா (அவர்களிடம்) கூறினார்

மேலும் (7:59-65-73-85) 23:91, 11:50, 20:14, 23:23, 06:19, 06:74, 25:03, 36:74, 37:86, 46:28 ஆகிய வசனங்களில் இதே கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது

3-மனோஇச்சைக்கு கட்டுப்பட்டு மனோஇச்சைக்கு வளிப்படுவதையும் குறிப்பதற்கு இலாஹ் என்றவார்த்தை அல்குர்ஆனில் இறைவனால் பயன்படுத்தப் பட்டுள்ளது

أَرَأَيْتَ مَنِ اتَّخَذَ **إِلَهَهُ هَوَاهُ** أَفَأَنْتَ تَكُونُ عَلَيْهِ وَكِيلًا [الفرقان : 43

25:43. தன் (இழிவான) இச்சையையே தன் தெய்வமாக எடுத்துக் கொண்டவனை (நபியே!) நீர் பார்த்தீரா? அ(த்தகைய)வனுக்கு நீர் பாதுகாவலராக இருப்பீரா?

أَفَرَأَيْتَ مَنِ اتَّخَذَ **إِلَهَهُ هَوَاهُ** وَأَضَلَّهُ اللَّهُ عَلَى عِلْمٍ وَخَتَمَ عَلَى سَمْعِهِ وَقَلْبِهِ وَجَعَلَ عَلَى بَصَرِهِ غِشَاوَةً فَمَنْ يَهْدِيهِ مِنْ بَعْدِ اللَّهِ أَفَلَا تَذَكَّرُونَ [الجاثية : 23

45:23. (நபியே!) எவன் தன்னுடைய (சரீர, மனோ) இச்சையைத் தன்னுடைய தெய்வமாக ஆக்கிக் கொண்டானோ, அவனை நீர் பார்த்தீரா? மேலும், அறிந்தே அல்லாஹ் அவனை வழிகேட்டில் விட்டு அவனுடைய காதுகள் மீதும் இருதயத்தின் மீதும் முத்திரையிட்டு இன்னும், அவனுடைய பார்வை மீதும் திரையை அடைத்துவிட்டான். எனவே, அல்லாஹ்வுக்குப் பிறகு அவனுக்கு நேர்வழி காண்பிப்பவர் யார்? நீங்கள் சிந்தித்து உணர வேண்டாமா?

இந்த மூன்று பிரயோகங்களின் அடிப்படையில்தான் இந்த إِلَه இலாஹ் என்ற சொல்லோ, அல்லது அதன் பன்மைச் சொல்லான ஆலிஹத் என்ற சொல்லோ, பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இஸ்லாத்தை தவறாகப் புரிந்துகொண்ட அத்வைதவாதிகள் இலாஹ் என்ற வார்தைக்கு 'கல்க்' அதாவது சிருஷ்டி என்ற ஒரு புதுக்கருத்தை எந்தவிதமான அடிப்படையும் இல்லாமல் கொடுத்துள்ளனர் இதற்க்கு ஆதாரமாக குர்ஆன் ஹதீஸோ, அகராதியோ ஆதாரமாக காட்டப்படவில்லை மாறாக இந்துமத சித்தாந்தங்களும், தத்துவங்களுமே முன்வைக்கப்பட்டுள்ளன. சில குர்ஆன் வசனங்களை தவறாக விளங்கியும் இதற்கு இப்படியான வியாக்கியானம் செய்கின்றனர் அவை பற்றிய விளக்கத்தை அடுத்த இதழில் பார்ப்போம்

**தொடரும்......**

**- மௌலவி. ஏ. அமீறுல் அன்சார் (மக்கி) -**